தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

தமிழ்நாடு காவல் துறையில் ஆண் / பெண் சார்பு ஆய்வாளர்கள் பதவிக்கான நேரடி நியமனத் தேர்வு 2010 (தேர்வு குறியீடு எண்.1)

விளம்பர எண்.110

I) இந்தியக் குடியுரிமையுடைய கீழ்க்காணும் தகுதி பெற்ற ஆண் / பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து காவல் சார்பு ஆய்வாளர்கள் பதவிக்கு பொது விண்ணப்பதாரர்களிடமிருந்தும், காவல் துறையைச் சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்தும் விளையாட்டுகளில் திறமையுடையவர்களிடமிருந்தும் காவல்துறை களப்பணியாளர்கள் / அமைச்சுப்பணியாளர்களைச் சார்ந்துள்ள வாரிசுகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

II) பதவிகளின் மொத்த எண்ணிக்கை: 1095 :

பிரிவு	காலிப் பணியிடங்கள்		மொத்தம்
	ஆண்கள்	பெண்கள்	
தாலுகா	566	244	810
சேமநலப்படை	113	48	161
தமிழ்நாடு சிறப்பு காவல் படை	88	36	124
மொத்தம்	767	328	1095

III) தற்போது அமலில் உள்ள அரசாணையின் அடிப்படையில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு (பொதுப்போட்டி - 31%, பிற்படுத்தப்பட்டோர் - 26.5%, பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) - 3.5%, மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் - 20%, ஆதிதிராவிடர் - 15%, ஆதிதிராவிடர் (அருந்ததியர்) - 3% மற்றும் பழங்குடியினர் - 1%) கடைப்பிடிக்கப்படும்.

IV) காவல் சார்பு ஆய்வாளர்கள் (ஆண் / பெண்) பதவிகளுக்கு உள்ள மொத்த காலி இடங்களில் முந்தைய ஆண்டுகளில் நிரப்பப்படாமல் கொண்டு வரப்பட்ட (Carry Forward) காலி பணியிடங்கள் 3 ஆண்கள் (ஆதிதிராவிடர் - விளையாட்டு ஒதுக்கீடு) காலி பணியிடங்கள் மற்றும் 1 பெண் (பழங்குடியினர் - 20% காவல் துறையை சார்ந்தவர்களுக்கான ஒதுக்கீடு) காலி பணியிடம் தவிர்த்த மீதமுள்ள காலிப் பணியிடங்களில் 5% விளையாட்டிற்கான ஒதுக்கீட்டின் கீழும், 20% காவல்துறையைச் சார்ந்தவர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழும், 10% காவல் துறையைச் சேர்ந்த களப்பணியாளர்கள் மற்றும் காவல் துறை அமைச்சு பணியாளர்கள் சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டின் கீழும் நிரப்பப்படும்.

V) ஊதிய விவரம் : ரூ.9300-34800 தர ஊதியம் ரூ.4300.

VI) முக்கிய தேதிகள் :

வ.எண்	இத்தேர்வுக்கான முக்கிய தேதிகள்	நாள்	நேரம்
1	விளம்பரம் வெளியிடப்பட்ட நாள்	01.04.2010	
2	விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்	03.05.2010	மாலை 5.45 மணி
3	காவல்துறை விண்ணப்பதாரர்களுக்கான எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள்	03.07.2010	காலை 09.00 மணி
4	பொது பிரிவு, மற்றும் விளையாட்டு ஒதுக்கீடு மற்றும் காவல் துறை களப்பணியாளர்கள் / காவல்துறை அமைச்சுப் பணியாளர்களைச் சார்ந்துள்ள வாரிசு ஒதுக்கீடு விண்ணப்பதாரர்களுக்கான எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள்	04.07.2010	காலை 09.00 மணி

நேர்முக தேர்வுக்கான தேதி பின்னர் தெரிவிக்கப்படும்.

குறிப்பு : காவல் சார்பு ஆய்வாளர் (தாலுகா காவல் - TP / சேமநலப்படை - AR மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் - TSP) ஆகிய பதவிகளில் ஏற்பட்டுள்ள காலியிடங்களுக்கு ஏற்ப தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள், அவர்கள் பெற்ற உயர்ந்தபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில் மற்றும் விண்ணப்பதாரர்கள் தெரிவிக்கும் பதவி விருப்பம் (Preference) ஆகியவற்றின் அடிப்படையில் நிரப்பப்படும். தங்களுடைய விருப்பத்தை (Preference) விண்ணப்பத்தில் அதற்குரிய இடத்தில் சரியாக பூர்த்தி செய்து தெரிவிக்க வேண்டும்.

VII) இப்பதவிக்கு விண்ணப்பிப்போருக்கு இருக்க வேண்டிய தகுதிகள்.

அ) வயது :

1) 01.07.2010 அன்று 20 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும். (30.06.1990 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்திருக்க வேண்டும்).

2) 28 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். (01.07.1982 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

3) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள் : 01.07.2010 அன்று 20 வயது நிறைவு பெற்றவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது 01.07.1980 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

4) ஆதி திராவிடர் / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள் : 01.07.2010 அன்று 20 வயது நிறைவு பெற்றவராகவும் 33 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (அதாவது 01.07.1977 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

5) (i) முன்னாள் இராணுவத்தினர் : 01.07.2010 அன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (அதாவது 01.07.1965 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

(ii) முன்னாள் இராணுவத்தினர் : இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு இந்த அறிவிக்கை வெளிவந்த தேதியில் மூன்றாண்டு நிறைவு செய்யாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். அதாவது 01.07.2007 அன்றோ அதற்குப் பின்னரோ இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

6) ஆதரவற்ற விதவைகள் : எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் 01.07.2010 அன்று 20 வயது நிறைவு அடைந்தவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (அதாவது 01.07.1975 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

ஆ) உடல் அளவுகள் :

ஆண் : 1) உயரம் : குறைந்த அளவு 170 செ.மீட்டர் இருக்க வேண்டும். ஆதி திராவிடர் /பழங்குடியினர் உயரம் குறைந்த அளவு 167 செ. மீட்டர் இருக்க வேண்டும்.

2) மார்பளவு : அனைத்து வகுப்பினருக்கும் சாதாரண நிலையில் 81 செ.மீ இருக்க வேண்டும். மூச்சடக்கிய மார்பு விரிவாக்கம் (Expansion) குறைந்த அளவு 5 செ.மீ இருக்க வேண்டும்.

பெண் : 1) உயரம் : குறைந்த அளவு 159 செ.மீட்டர் இருக்க வேண்டும். ஆதி திராவிடர்/பழங்குடியினர் உயரம் குறைந்த அளவு 157 செ.மீ. இருக்க வேண்டும்.

இ) கல்வித் தகுதி (அனைத்து பிரிவினருக்கும்)

பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பட்டப்படிப்பு படித்திருக்கவேண்டும். பட்டப்படிப்புக்கான சான்றிதழ் இத்தேர்வு அறிவிக்கை (Notification) வெளியிடும் தேதிக்கு முன்னர் பெற்றிருக்க வேண்டும். திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் மூலமாக இளங்கலை பட்டம் /முதுகலைப்பட்டம் பள்ளியிறுதி தேர்வு (10-ஆம் வகுப்பு) மற்றும் மேல்நிலைக் கல்வித் (12-ஆம் வகுப்பு) தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற பின்னரே பெற்றிருக்க வேண்டும். இளங்கலை பட்டம் பெறாது திறந்தவெளி பல்கலை கழகம் மூலம் பெற்ற முதுகலைப் பட்டம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

VIII) விளையாட்டுத் துறையில் திறமையுடையவர்கள் (ஆண்/ பெண்) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் முறை :

அ) 1) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் (ஆண் /பெண்) பொது விண்ணப்பதாரர்களைப் போலவே அனைத்து தகுதிகளும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் கீழே குறிப்பிட்டுள்ள 14 அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது அதற்கு மேற்பட்ட விளையாட்டுகளிலோ பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டி அல்லது மாநிலங்களுக்கிடையேயான போட்டி அல்லது சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்டு விளையாட்டு சான்றிதழ் படிவம் I, II, அல்லது III பெற்றிருக்க வேண்டும்.

2) விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள், தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் முதல் 10 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும். அதற்குப் பின்னரே அவரவர் தேர்ந்தெடுக்கப்படும் பிரிவிற்கு (Taluk, AR, TSP) செல்ல அனுமதிக்கப்படுவர். இதற்கான உறுதிமொழி பத்திரத்தில் கையொப்பமிடவேண்டும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகள் :

1. கூடைப்பந்து, 2. கால்பந்து, 3. ஹாக்கி, 4. கையுந்துபந்து, 5. கைப்பந்து, 6. கபடி, 7. மல்யுத்தம், 8. குத்துச் சண்டை, 9. ஜிம்னாஸ்டிக்ஸ், 10. ஜூடோ, 11. பளு தூக்குதல், 12. நீச்சல் போட்டி, 13. தடகளப் போட்டிகள், 14. குதிரையேற்றம்.

(இ) பொது விண்ணப்பதாரர்களைப் போலவே விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்களும் எழுத்துத் தேர்வு மற்றும் உடல் கூறு அளத்தல், உடல் தகுதித் தேர்வு மற்றும் உடல் திறன் போட்டிகளில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும். மற்ற விவரங்களுக்கு விண்ணப்பத்துடன் பெறப்படும் தகவல் சிற்றேட்டை படித்து தெரிந்துக்கொள்ளவும்.

(ஈ) காவல் களப் பணியாளர் மற்றும் காவல்துறை அமைச்சுப் பணியாளர்களை சார்ந்துள்ளோர்கள் ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்க தகுதியுடையோர் : காவல்துறையில் பணியிலுள்ள இறந்த, ஓய்வு பெற்ற மற்றும் மருத்துவக் காரணங்களால் ஓய்வு பெற்ற களப்பணியாளர், காவல் துறை அமைச்சுப் பணியாளர், அலுவலக உதவியாளர், புகைப்படக்காரர், சுருக்கெழுத்து அறிக்கையாளர், கைரேகை பிரிவு பணியாளர் மற்றும் தொழிற்நுட்ப களப்பணியாளர்களை சார்ந்தோர்கள், சார்ந்துள்ள வாரிசுக்கான (Ward cum Dependent) ஒதுக்கீட்டின் கீழ், கீழ்காண்போர் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

a) மகன், b) திருமணமாகாத மகள், c) சட்டப்படி தத்தெடுக்கப்பட்ட மகன், d) சட்டப்படி தத்தெடுக்கப்பட்ட திருமணமாகாத மகள்.

மொத்த 10%-ல் 10% காவல் துறையில் பணியிலுள்ள, ஓய்வு பெற்ற, இறந்த மற்றும் மருத்துவக் காரணங்களால் ஓய்வு பெற்ற அமைச்சுப் பணியாளர்கள், அலுவலக உதவியாளர், துப்புரவு பணியாளர், புகைப்படக்காரர், சுருக்கெழுத்து அறிக்கையாளர், கைரேகை பிரிவு பணியாளர், தொழிற்நுட்ப களப்பணியாளர்கள் போன்ற பணியாளர்களை சார்ந்தோர்க்கு (Ward-cum-Dependent) இவ்வொதுக்கீடு பொருந்தும்.

காவல் துறையைச் சார்ந்த களப்பணியாளர்கள், சார்ந்துள்ள வாரிசுக்கான (Ward-cum-dependent) சான்றிதழை தாங்கள் பணிபுரியும் பிரிவின் உயர் அதிகாரியான காவல் ஆய்வாளர் மற்றும் அதற்கு உயர்ந்த நிலையில் உள்ள அதிகாரிகளிடமிருந்தும், அமைச்சுப் பணியாளர்களுக்கான சார்ந்துள்ள வாரிசுக்கான (Ward-cum-dependent) சான்றிழை நேர்முக உதவியாளர் மற்றும் அதற்கு உயர்ந்த நிலையில் உள்ள அதிகாரிகளிடமிருந்தும் பெற்று விண்ணப்பத்துடன் அனுப்பலாம். ஏற்கனவே இவ்விளம்பர நாளுக்கு முன் வேறு பிற தேர்வுக்காக பெறப்பட்ட சான்றிதழ்களின் நகலையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பலாம். ஆனால் சான்றிதழ் சரிபார்த்தலுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்த்தலின் போது காவல் கண்காணிப்பாளர் (SP/DC/CMT) மற்றும் அதற்கு உயர்ந்த நிலையிலுள்ள அதிகாரிகளிடமிருந்து இவ்விளம்பரம் வெளிவந்த நாளுக்குப்பின் பெறப்பட்ட அசல் சான்றிதழையே சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்கள், சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டார்கள். நிரந்தர பணிநீக்கம் மற்றும் கட்டாய பணி நீக்கம் செய்யப்பட்டோரின் வாரிசுகள் இவ்வொதுக்கீட்டின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டார்கள். ஒரு குடும்பத்தில் ஒரு விண்ணப்பதாரர் மட்டுமே சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர் ஏற்கனவே மத்திய அரசு பணியில் அல்லது மாநில அரசு அல்லது தமிழ்நாடு அரசு நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளில் பணியில் இருந்தால் சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டின்கீழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டார்கள்.

IX) OMR விண்ணப்பப் படிவம் (பொது / விளையாட்டு ஒதுக்கீடு / சார்ந்துள்ள வாரிசு ஒதுக்கீடு / காவல் துறையில் பணிபுரிபவர்களுக்கான ஒதுக்கீடு) :-

(1) தெரிவு செய்யப்பட்ட உதவி அஞ்சல் நிலையங்களில் இருந்து ரூ.30/-க்கு பெறப்படும் OMR விண்ணப்பப்படிவங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) விண்ணப்பத்தின் நகல் எடுக்கப்பட்ட பிரதியோ அல்லது தட்டச்சு செய்யப்பட்ட பிரதியோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(3) அஞ்சல் நிலையங்களைத் தவிர வேறு எந்த இடத்திலிருந்தும் வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பத்துடன் பெறப்படும் தகவல் சிற்றேட்டில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

(4) OMR விண்ணப்பப்படிவம் மற்றும் பொது அறிவுரைகள் கொண்ட தகவல் சிற்றேடு விண்ணப்பிப்பவர்களுக்கு தமிழ்நாடு/புதுச்சேரி தலைமை அஞ்சல் நிலையத்திலிருந்தும், தெரிவு செய்யப்பட்ட உதவி அஞ்சல் நிலையங்களிலிருந்தும் ரூ.30/- க்கு வழங்கப்படும். அஞ்சல் நிலையங்களின் பட்டியல், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழும இணையதளம் www.tn.gov.in/tnusrb-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

X) தேர்வுக் கட்டணம் :

விண்ணப்பதாரர்கள், தேர்வுக் கட்டணம் ரூ.230/-ஐ அஞ்சலகத்தில் செலுத்தி, அதற்கான இரசீதைப் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட OMR விண்ணப்பத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

XI) விண்ணப்பங்கள், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கடைசி தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இக்குழும அலுவலகத்தை வந்தடையும்படி **தலைவர், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வுக்குழுமம், எண்.807, இரண்டாம் தளம், பி.டி.லீ. செங்கல்வராய நாயக்கர் மாளிகை, அண்ணாசாலை, சென்னை - 600 002** என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு அஞ்சல் அல்லது விரைவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். கடைசித் தேதியான **03.05.2010 மாலை 05.45-க்கு** பின்னர் இவ்வலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

XII) விண்ணப்பப்படிவத்துடன் இணைக்க வேண்டிய சான்றொப்பமிட்ட (Attested Copies) சான்றிதழ்களின் நகல்கள்

1) வயதை நிருபிக்கச் சான்று (Transfer Certificate / SSLC Mark Sheet).

2) கல்விச் சான்று (பத்தாம் வகுப்பு, மேல் நிலை வகுப்பு, இளங்கலை /முதுகலைப் பட்ட சான்றின் நகல்கள்).

3) சாதிச் சான்று (அரசாணை நிலை எண் 2137 ஆதி திராவிடர் /பழங்குடி நலத்துறை, நாள் 11.11.1989-ன் படி பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்கள், வருவாய் கோட்டாட்சி அலுவலரால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழின் நகலை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். 11.11.1989-க்கு முன்னர் தாசில்தார் அவர்களால் வழங்கப்பட்ட பழங்குடி வகுப்பைச் சார்ந்தவருக்கான சாதிச் சான்றிதழின் நகலை சமர்ப்பித்தாலும் செல்லுபடியாகும்.

4) இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருப்பின் அதற்கான சான்று (Discharge Certificate).

5) ஆதரவற்ற விதவைக்கான சான்று (சம்பந்தப்பட்ட கோட்டாட்சியரிடமிருந்து [RDO/ Sub-Collector / Dy. Collector] பெற்றிருக்க வேண்டும்).

6) விளையாட்டுக்கான சான்றிதழ் படிவம் I, II மற்றும் III.

7) சார்ந்துள்ள வாரிசுக்கான சான்றிதழ்.

8) தேசிய மாணவர் படை, தேசிய நாட்டு நலப் பணி திட்டம் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பெற்ற சான்றிதழ்கள்.

9) தேசிய அளவிலான காவல்துறை வேலை சம்மந்தப்பட்ட போட்டிகளில் தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் மற்றும் வெண்கலப் பதக்கம் பெற்றதற்கான சான்றிதழ்களின் நகல்கள்

10) அசல் சான்றிதழ்களின் நகல்களில் A அல்லது B பிரிவு அரசு அலுவலரின் சான்றொப்பம் (Attestation) பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். சான்றொப்பம் (Attestation) பெறப்படாத, நகல் சான்றிதழ்கள் இணைக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11) விண்ணப்பத்துடன் அனுப்பாமல் தனியாக அனுப்பப்படும், எந்தவொரு சான்றிதழின் நகலும் ஏற்கப்படாது.

XIII) அழைப்புக் கடிதம் :

விண்ணப்ப பரிசீலனைக்குப் பின், தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் தேர்வு மைய விவரங்களுடன், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழும அஞ்சல் உறையின் மூலம் அனுப்பப்படும். விண்ணப்பதாரர்கள் அஞ்சல் வில்லை ஒட்டிய சுய முகவரியிட்ட உறையினை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டியதில்லை.

XIV) எழுத்துத் தேர்வு : (குறியிலக்க முறையில்)

Open Quota, Sports Quota and Ward cum dependent.

(a) General Knowledge	- 40 மதிப்பெண்கள்
(b) Logical Analysis, Numerical Analysis, Psychology Test, Communication Skills and Information handling ability	- 30 மதிப்பெண்கள்
(Objective Type Questions - 140 each ½ mark Duration 2½ hrs.) மொத்தம்	- 70 மதிப்பெண்கள்

(2) Departmental Quota :

(a) General Knowledge	- 15 மதிப்பெண்கள்
(b) Communication Skills, Numerical Skills, Logical Analysis, Information handling ability, Test on Indian Penal Code, Criminal Procedure Code, Indian Evidence Act, Police Standing Orders and Police Administration.	- 70 மதிப்பெண்கள்
(Objective Type Questions - 170 each ½ marks) Duration 3 hrs.) மொத்தம்	- 85 மதிப்பெண்கள்

3) பொது, விளையாட்டுக்கான ஒதுக்கீடு மற்றும் சார்ந்தோருக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்கள் எழுத்துத் தேர்வில் குறைந்தபட்சம் 35% பெறவேண்டும். அதாவது 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 25 மதிப்பெண்கள் பெறவேண்டும்.

4) துறைக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்தவர்கள் எழுத்துத் தேர்வில் குறைந்தபட்சம் 35% பெறவேண்டும். அதாவது 85 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 30 மதிப்பெண்கள் பெறவேண்டும்.

5) இத்தேர்வு தொடர்பான பாடதிட்டங்கள் இத்தேர்வுக் குழுமத்தின் **www.tn.gov.in/tnusrb** என்ற இணைய தளத்திலும் தகவல் சிற்றேட்டிலும் (Prospectus) தெரிவிக்கப் பட்டுள்ளது.

XV) 1) பொது / விளையாட்டு ஒதுக்கீடு / சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டாளாருக்கு அசல் சான்றிதழ்களைச் சரிபார்த்தல் மற்றும் உடற்கூறு அளத்தல் : வயது, கல்வி மற்றும் எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் அதிகபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில் மொத்த காலியிட எண்ணிக்கையை போல் வகுப்பு வாரி விகிதாச்சாரப்படி 5 மடங்கு விண்ணப்பதாரர்கள் மட்டும் அசல் சான்று சரிபார்த்தல் மற்றும் உடற்கூறு அளத்தல் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தலின் போது விண்ணப்பத்துடன் அனுப்பிய நகல் சான்றிதழ்களின் அசல்கள் அனைத்தையும் தேர்வு மையத்திற்கு குறிப்பிட்ட தேதியில் சரிபார்ப்பதற்காக அவசியம் கொண்டுவர வேண்டும். உடல் கூறு அளத்தலில் தேர்வு பெற்றவர்கள் உடல் தகுதி தேர்வுக்கு (Endurance Test) அனுமதிக்கப்படுவர்.

2) உடல் கூறு அளத்தலில் மேல் முறையீடு : உடல் கூறு அளத்தலில் (உயரம் மற்றும் மார்பளவு) ஏதேனும் மேல்முறையீடு இருந்தால் விண்ணப்பதாரர்கள் உடனே அங்குள்ள தேர்வு மைய குழுத் தலைவரை அணுகி முறையிடலாம். மேல்முறையீட்டாளர்களுக்கு உடனே மீண்டும் உடல் கூறு அளத்தல் அந்த மையத்தில் உள்ள குழுத் தலைவர் அவர்களால் நடத்தப்படும். பின்னர் பெறப்படும் எந்த மேல்முறையீடும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3) உடல் தகுதித் தேர்வு (Endurance Test) :

i) ஆண் விண்ணப்பதாரர்கள் 1500 மீட்டர் ஓட்டத்தினை 7 (ஏழு) நிமிடங்களுக்குள் முடிக்க வேண்டும். இதில் தேர்வு பெற்றவர்கள் மட்டுமே உடல் திறன் போட்டிக்கு(Physical Efficiency Test) அனுமதிக்கப்படுவர்.

ii) பெண் விண்ணப்பதாரர்கள் 400 மீட்டர் ஓட்டத்தினை 2 (இரண்டு) நிமிடங்களுக்குள் முடிக்க வேண்டும். இதில் தேர்வு பெற்றவர்கள் மட்டுமே உடல் திறன் போட்டிக்கு (Physical Efficiency Test) அனுமதிக்கப்படுவர்.

4) உடல் திறன் போட்டிகள் (Physical Efficiency Test):

	ஆண்கள்			பெண்கள்		
வ.எண்.	தேர்வுகள்	1 நட்சத்திரம் 2 மதிப்பெண்கள்	2 நட்சத்திரம் 5 மதிப்பெண்கள்	தேர்வுகள்	1 நட்சத்திரம் 2 மதிப்பெண்கள்	2 நட்சத்திரம் 5 மதிப்பெண்கள்
1.	கயிறு ஏறுதல்	5 மீட்டர்கள்	6 மீட்டர்கள்	நீளம் தாண்டுதல்	3.25 மீட்டர்கள்	3.75 மீட்டர்கள்
2.	நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல்	3.80 மீட்டர்கள் / 1.20 மீட்டர்கள்	4.50 மீட்டர்கள் / 1.40 மீட்டர்கள்	கிரிக்கெட் பந்து எறிதல் (அல்லது) குண்டு எறிதல்	17 மீட்டர்கள் / 4.50 மீட்டர்கள்	21 மீட்டர்கள் / 5.50 மீட்டர்கள்
3	100 மீட்டர் ஓட்டம் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம்	15.0 வினாடிகள் / 80.0 வினாடிகள்	13.5 வினாடிகள் / 70.0 வினாடிகள்	100 மீட்டர் ஓட்டம் (அல்லது) 200 மீட்டர் ஓட்டம்	16.50 வினாடிகள் / 36 வினாடிகள்	15.50 வினாடிகள் / 33 வினாடிகள்

5) ஆண் தேர்வாளர்கள் :- கயிறு ஏறுதல் போட்டியில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே பிற போட்டிகளுக்கு தகுதியுடையவர் ஆவார்கள். அடுத்தகாக நீளம் தாண்டுதல் அல்லது உயரம் தாண்டுதலில் ஏதேனும் ஒன்றையும் மற்றும் 100 மீட்டர் ஓட்டம் அல்லது 400 மீட்டர் ஓட்டத்தில் ஏதேனும் ஒன்றையும் தேர்ந்தெடுத்து கலந்து கொள்ள வேண்டும். இப்போட்டிகளில் ஏதேனும் ஒரு போட்டியில் தகுதி பெறவில்லையெனில் அந்த விண்ணப்பதாரர் போட்டியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார். மேற்படி 3 தேர்வுகளில், ஒவ்வொரு போட்டியிலும் குறைந்தது ஒரு நட்சத்திரத் திறனுடன் மொத்தம் 3 நட்சத்திரங்கள் பெற்று குறைந்தது 6 மதிப்பெண்கள் பெற வேண்டும். அவ்வாறு பெறாதவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.

6) பெண் தேர்வாளர்கள் :- உடல் தகுதித் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற அனைவரும், உடல் திறன் போட்டிகளில் கலந்து கொள்ளவேண்டும். மேலே கொடுக்கப்பட்டுள்ள 3 போட்டிகளில் நீளம் தாண்டுதல், கிரிக்கெட் பந்து எறிதல் அல்லது குண்டு எறிதல் போட்டியில் ஏதேனும் ஒன்றையும், 100 மீட்டர் ஓட்டம் அல்லது 200 மீட்டர் ஓட்டத்தில் ஏதேனும் ஒன்றையும் தேர்ந்தெடுத்து கலந்து கொள்ளலாம். எந்த உடல் திறன் போட்டியில் நட்சத்திரம் மற்றும் மதிப்பெண் பெறவில்லை என்றாலும் பெண் தேர்வாளர்கள் 3 போட்டியிலும் கலந்து கொள்ள வேண்டும். அவ்விதம் இப்போட்டிகளில் பெறப்படும் மதிப்பெண்கள் மொத்த தகுதி மதிப்பெண்கள் கணக்கிடும் போது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

XVI) விளையாட்டுக்கான ஒதுக்கீடு மற்றும் சார்ந்துள்ள வாரிசுக்கான (ward-cum-dependent) ஒதுக்கீட்டின் கீழ் ஆண் / பெண் விண்ணப்பதாரர்களை தேர்வு செய்வதில் பற்றாக்குறை ஏற்பட்டால் நிரப்பப்படாத காலியிடங்கள் பொது விண்ணப்பதாரர்களைக் கொண்டு அந்தந்த வகுப்புவாரி விகிதாச்சாரப்படி நிரப்பப்படும்.

XVII) காவல் துறையில் பணிபுரிபவருக்களுக்கான **20%** ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்களுக்கான தகுதிகள் :

(1) வயது : 01.07.2010 அன்று 45 வயது மிகாமலும் 5 ஆண்டுகள் பணியினை நிறைவு செய்தும் இருக்க வேண்டும். இந்த அறிவிக்கை வெளிவந்த நாளிற்கு 5 வருடங்களுக்குள் சிறுதண்டனைகளான கரும்புள்ளி (Black Mark), கண்டித்தல் (Reprimand), கண்டனம் (Censure) இதை தவிர்த்து பிற எந்தவித தண்டனையும் இல்லாமல் (Clean Record) இருக்க வேண்டும்.

(2) கல்வித் தகுதி : பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பட்டப்படிப்பு படித்திருக்கவேண்டும். பட்டப்படிப்புக்கான சான்றிதழ் இத்தேர்வு அறிவிக்கை (Notification) வெளியிடும் தேதிக்கு முன்னர் பெற்றிருக்க வேண்டும். திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் மூலமாக இளங்கலை பட்டம் / முதுகலைப்பட்டம் பள்ளியிறுதி தேர்வு (10-ஆம் வகுப்பு) மற்றும் மேல்நிலைக் கல்வித் (12-ஆம் வகுப்பு) தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற பின்னரே பெற்றிருக்க வேண்டும். இளங்கலை பட்டம் பெறாது திறந்தவெளி பல்கலை கழகம் மூலம் பெற்ற முதுகலைப் பட்டம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(3) காவல் துறைக்கான 20% ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் விருப்பமிருந்தால், பொது ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் தகுதி பெற்றிருந்தால், பொது ஒதுக்கீட்டின் கீழும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து, பணிபுரியும் அலுவலக தலைவரிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் பெற்று விண்ணப்பங்களை இக்குழுமத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். காவல் துறைக்கான ஒதுக்கீட்டிற்கும், பொது ஒதுக்கீட்டிற்கும் தனித் தனியே விண்ணப்பிக்க வேண்டும், தனித் தனியே தேர்வுகள் எழுத வேண்டும்.

(4) விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய சான்றொப்பமிட்ட சான்றுகளின் நகல்கள் : பத்தி எண் XII-ல் சொல்லப்பட்ட தகுதியான சான்றிதழ்கள்.

(5) காவல்துறைக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு வகுப்புவாரி ஒதுக்கீட்டைத் தவிர காவல்துறை களப்ப